13.00 மணி

எனவே, 1991–92 ஆம் ஆண்டிற்கான பொது கணக்குக் குழுவிற்கு, இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக, இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதிகளின், 204–வது விதியின் கீழ், திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களை, இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991–92 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு (Committee on Public Undertakings) பேரவையின் 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்கண்ட 16 உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்புத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:—

1. திரு. எம். எம். எஸ். அபுல் ஹசன்
2. திரு. ஆர். ஈஸ்வரன்
3. திரு. ஜி. காளன்
4. திரு. ப. ரங்கநாதன்
5. திரு. கே. எஸ். துரைமுருகன்
6. திரு. என். ஆர். சிவபதி
7. திரு. பி. கலியபெருமாள்
8. திரு. கே. முனிவெங்கடப்பன்
9. திரு. கி. தருமலிங்கம்
10. திரு. எ. தா. பொன்னுவேலு
11. திரு. பா. கோவிந்தராஜ்
12. திரு. செ. கு. தமிழரசன்
13. திரு. செ. ஆறுமுகம்
14. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி
15. திரு. க. கோபால்
16. திரு. ஜி. பழனிசாமி

எனவே, 1991–92 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கின்றேன். மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதிகளின் 213–வது விதியின் கீழ், திரு. கி. தருமலிங்கம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.